(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 385.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஓகத்து 19, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2675/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டத்திற்குரிய சாத்தியவள கற்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கற்கைகளை மேற்கொள்வதற்காக குறித்த நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசத்தை அண்மித்த கடற்கரையில் கற்பாறையொன்று காணப்படுவதாக சாத்தியவள கற்கை அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கற்பாறையை தகர்ப்பதற்கு ஏற்கப்பட்ட மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3277/12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 - 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள், கொடைகள் ஆகியவற்றின்,

(i) பெறுமதிகள் எவ்வளவு என்பதையும்;

(ii) வழங்கப்பட்ட காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) சராசரி வட்டிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) கடன்கள் மற்றும் கொடைகள் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது கருத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3627/ '13

3.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் சதுப்பு நிலக் காடுகளின் அளவு எவ்வளவு;

(ii) மேற்படி காடுகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) இலங்கையில் சதுப்பு நிலக் காடுகளில் வாழ்வதாக இனங்காணப்பட்டுள்ள விலங்கினங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) மேற்படி விலங்கினங்களின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமான "சுவந்த" என்ற தாவரத்தின் பாதுகாப்புக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறெனின், அந்த நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3922/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி நகரத்தில் சேருகின்ற குப்பை கூளங்கள் கண்டி கொஹாகொட பிரதேசத்தில் மகாவலி கங்கைக்கு அருகாமையிலுள்ள இடமொன்றில் அகற்றப்படுகின்றதென்பதையும்;

(ii) அவ்விடத்தில் விலங்குப் பண்ணையொன்று பேணிவரப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இடத்தில் விலங்குப் பண்ணையொன்றை பேணிவருவதற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி விலங்குப் பண்ணை உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) மேற்படி விலங்குப்பண்ணையின் உரிமையாளர் இந்த தொழில்முயற்சிக்கு மேலதிகமாக வேறு நிறுவனமொன்றில் தொழில் புரிவாராயின் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் அவர் வகிக்கும் பதவி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3943/ '13

5.

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2005 முதல் 2013 வரையான ஆண்டுக் காலப்பகுதிக்குள் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் செலவிடப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும்,

(i) உள்ளடக்கியுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) நியமிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனவா என்பதையும்;

(iv) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளை சபா பீடத்தில் வைப்பாரா என்பதையும்;

(v) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

4164/ '13

6.

கௌரவ பி. ஹரிசன்,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆயுர்வேத மருத்தவர்கள் உள்ளடங்கும் வகுதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு வகுதிக்கும் உரிய மருத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்த வகுதிகளிலுள்ள பொது வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினுள் ஆயுர்வேத திணைக்களத்தினால் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள மொத்த உடல் பிடித்துவிடும் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வெண்ணிக்கை மற்றும் அவற்றின் முகவரிகள் மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி உடல் பிடித்துவிடும் நிறுவனங்களை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) ஆயர்வேத திணைக்களத்திற்கு மேலதிகமாக வேறு நிறுவனங்களினால் உடல் பிடித்துவிடும் நிறுவனங்களை நடாத்துவதற்கான உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பின், அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆயுர்வேத உடல் பிடித்துவிடும் நிறுவனமொன்றை நடாத்துவதற்கு இருக்க வேண்டிய ஆகக்குறைந்த தொழில்சார் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறானதொரு நிலையமொன்றை நடாத்தும் இடமொன்றில் இருக்க வேண்டிய தரநியமங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4318/’13

7\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிழக்கு மாகாண மக்களின் எழுத்தறிவு தொடர்பாக இறுதியாக ஆய்வு நடாத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் எழுத, வாசிக்க ஆற்றலுள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் சனத்தொகையின் சதவீதம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் 10 வயது வரையிலான சிறார்களில் ஆரம்பக் கல்விக்கு ஆற்றுப்படுத்தப்படாத சிறார்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே வினவப்பட்டுள்ள புள்ளிவிபர பெறுமானங்கள் போதிய மட்டத்தில் உள்ளதென கல்வி அதிகாரிகள் ஏற்றுக்கொள்கின்றார்களா என்பதையும்;

(ii) எழுதுவதற்கும், வாசிப்பதற்குமான ஆற்றல் குறைவடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிலைமையை மாற்றுவதற்காக செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4525/ ’13

8\.

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட தண்டவாளங்களை விற்பதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கேள்விப் பத்திரம் கோரல்கள் நடைபெற்ற திகதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு தினத்திலும் கோரப்பட்ட கேள்விப் பத்திரங்களின் படி விற்பனை செய்யப்பட்ட தண்டவாளங்களின் எண்ணிக்கை, தண்டவாளங்களை கொள்வனவு செய்த நிறுவனம் மற்றும் ஒரு கிலோ கிராமுக்கு செலுத்தப்பட்ட விலை ஆகியன வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4614/ '13

9\.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் தற்போதைய தலைக்குரிய வருமானம் நியம அடிப்படையிலும் இலங்கை ரூபாய்களிலும் எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாட்டில் வருமானம் ஈட்டும் ஆட்களிடையேயுள்ள மொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில் தற்போதைய தலைக்குரிய வருமானத்துக்கு சமமான அல்லது அதை விட அதிகமான சம்பளத்தை பெறும் அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அது, ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கையில் சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4758/ '14

10\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமியோபதி மருத்துவச் சபை தாபிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தற்போது ஹோமியோபதி மருத்துவச் சபை இயங்கி வருகின்றதா என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டளவில் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோமியோபதி மருத்துவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) ஹோமியோபதி மருத்துவ முறையை பிரபல்யப்படுத்துவதற்காக அமைச்சு ஏதேனும் வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4903/ '14

11\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதிகளில் ஒரு குழுவினர் 2014 ஜனவரி 04 ஆம் திகதி போகம்பரை சிறைச்சாலையிலிருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சிறைக்கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது இவர்கள் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கும் மேற்குறிப்பிட்ட சிறைக்கைதிகளுக்கு வசிப்பதற்கு பொருத்தமான சூழல் இல்லையென்பதையும்;

(ii) இதனால் இவர்கள் கடுமையான சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி சிறைக்கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திகதி தொடக்கம் கடுமையான மனிதாபிமானமற்ற சித்திரவதைக்கு ஆளாகுகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) சிறைக்கைதிகள் முகம் கொடுத்துள்ள மேற்படி நிலைமை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4955/ '14

12.

கௌரவ நிரோஷன் பெரேரா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வென்னப்புவ நகரத்திலிருந்து கிரிமெட்டியான வரையில் செல்லுகின்ற "அலுத் மாவத்த" எனும் வீதியில் ஹெமில்டன் கால்வாய்க்குக் குறுக்காக நிர்மாணிக்கப்படும் பாலத்தின் மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) இப்பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iii) இந் நிறுவனத்தினால் குறிப்பிட்ட நிர்மாணப் பணிகளுக்கு வேறு நிறுவனமொன்றுக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், இந்த உப ஒப்பந்தம் வழங்கல் முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறையின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்யும் நிறுவனம் யாது என்பதையும்;

(vi) இந் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ (i) இல் குறிப்பிட்டுள்ள பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவுறும் வரை போக்குவரத்துக்காக தற்காலிக பாலமொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், வென்னப்புவ தொடக்கம் கிரிமெட்டியான வரையுள்ள மாற்றுப் பாதையூடாக பயணிக்கும் போது மொத்தமாகப் பயணிக்க வேண்டிய தூரம் எத்தனை கிலோமீற்றர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5024/ '14

13.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தயட்ட கிருள 2014இன் கீழ் வயம்ப பல்கலைக்கழக வளாகம், குளியாப்பிட்டி மத்திய மகா வித்தியாலய வளாகம் மற்றும் குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டிட நிர்மாணிப்புகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணிப்புகள் பிற கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அக் கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கட்டடத்திற்காகவும் மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி கட்டடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டனவா என்பதையும்;

(v) ஆமெனில், நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்ற போது பின்பற்றப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2677/ '12

14.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் திறந்து வைக்கப்பட்ட திகதி தொடக்கம் இன்றுவரையிலான காலகட்டத்தினுள் இத்துறைமுகத்தின் மாதாந்த வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு மாதத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்டபடி அறிக்கையிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தின் படி கிடைத்த இலாபம் அல்லது நட்டம் இத்துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்தின் இலக்குகளுக்கு ஒப்பீட்டளவில் திருப்தியடையக் கூடிய மட்டத்திலுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3278/12

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011, 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள், கொடைகள் ஆகியவற்றின்,

(i) பெறுமதிகள் எவ்வளவு என்பதையும்;

(ii) வழங்கப்பட்ட காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) சராசரி வட்டிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) கடன்கள் மற்றும் கொடைகள் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது கருத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்,— மாநகர சபைகள் (திருத்தம்),— (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்,— நகர சபைகள் (திருத்தம்),— (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்,— பிரதேச சபை (திருத்தம்),— 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

4.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்,— உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்),— (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

5.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்,— உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்),— 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

6.

நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்தி,— இலங்கையில் நிர்மாணத் தொழிலின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்வதற்கும்; நிர்மாணத் தொழிலின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், பதிவுசெய்வதற்கும்; விதிமுறைப்படுத்துவதற்கும் மற்றும் தரப்படுத்துவதற்கும்; நிர்மாணம் மீதான தேசிய மதியுரைப் பேரவையைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்கும்; நிர்மாணத் தொழில் அபிவிருத்தி நிதியம் மற்றும் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியத்தைத் தாபிப்தற்கும்; தொழிலுடன் தொடர்புடபட்ட உயர் தொழிலர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கைவினைஞர்கள் என்போரினது முன்னேற்றத்துக்காகவும் நல்வாழ்வுக்காகவும் வழிமுறைகளை ஏற்பாடு செய்வதற்கும்; நிர்மாணச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நீதி அமைச்சர்,— பிரிவிடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தின் 8 ஆம் மற்றும் 29 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 82 அ ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2014 யூலை மாதம் 18 ஆம் திகதிய 1871/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பவியல், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

15.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.